<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 47/2012 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | ரத்தினவேல் | நாள் | 15.02.2023 |
| தகப்பனார் பெயர் | மாரிமுத்து சாமியார் | | |

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.3 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

13) 01.06.1977 ம் தேதியில் நான் கருப்பண்ணனுக்கு விற்ற நிலத்தை கருப்பண்ணன், பழனிக்கும், குஞ்சுபையன் என்பவருக்கும் விற்றுவிட்டார் என்றால், சரிதான். மேற்படி என் நிலத்தை விற்றதற்கு பின்பு 1977ம் ஆண்டுக்கு பிறகு மேற்படி கருப்பண்ணனுக்கு நான் விற்பனை செய்த என் நிலத்திற்கு நான்கு புறங்களிலும் எனக்கு வேறு எந்த நிலங்களும் இல்லை என்றால், ச.எண்.325/1B ல் கிணற்றில் 1–1/4 செண்ட் பாகம் உள்ளது.

14) 05.11.2008 ம் தேதியில் பாகபிரிவினை பத்திரத்தில் என் தம்பி மகன்களான ராஜேந்திரன் வகையறா எழுதிக்கொண்ட பாகபிரிவினை பத்திரத்தின் மூலம் எனக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் நான் உடனடியாக வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எந்த பாதிப்பு இல்லாததால்தான் நான் வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

15) 2ம் பிரதிவாதி வெங்கடாச்சலம் 05.11.2008ம் தேதியில் தனக்கு என்ன செக்குபந்தி விவரங்கள் போட்டு 43 செண்ட் நிலம் பாத்தியப்பட்டதோ அதைத்தான் 1ம் பிரதிவாதி மாதையனுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரியல்ல. கிணறும், உத்தி, வாய்க்கால் மற்றும் தடம் ஆகியவை மேற்படி 43 செண்டுக்குள்ளேயே அடங்குகிறது.

16) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் 45 செண்டுகள் இல்லை என்றாலும், 43 செண்டுகள் தான் உள்ளது என்றாலும், சரிதான். நான் மேற்படி பாகபிரிவினை பத்திரத்தை செல்லாது என சொல்லாத நிலையில் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் பெயரில் எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தை செல்லாது என சொல்ல எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல.

17) மேற்படி 2ம் பிரதிவாதியிடமிருந்து, 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 43 செண்டில் 1 செண்டை தன் வசம் வைத்துக்கொண்டு 1ம் பிரதிவாதி மீதமுள்ள 42 செண்ட் நிலத்தை 7ம் பிரதிவாதிக்கு விற்றது செல்லதக்கது என்றால், சரியல்ல.

18) தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் தற்போது 1ம் பிரதிவாதி மற்றும் 7ம் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

19) பிரதிவாதிகள் என் உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், தாவா சொத்தை பொறுத்து எனக்கு தனிப்பட்ட அக்கறை எதுவும் இல்லை என்றாலும், சரியல்ல.

20) நான் சொல்வது போல் எனக்கு வசதியுரிமை பாத்தியம் இருந்திருந்தால் நான் தனி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால், சரியல்ல.

(5, 6 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.3 குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.